ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய: ஸ்ரீமத் வரவரமுநயே நம:
ஸ்ரீமத் வரத குரவே நம:

## பெரியாழ்வார், வடக்குத்திருவீதிப்பிள்ளை வருஷ திருட்சத்திரம் - ஆனி – ஸ்வாதி



பெரியாழ்வார், ஸ்ரீவில்லிபுத்தூர் - அவதாரஸ்தலம்
புகைப்படம் உதவி: ஸ்ரீ உ.வே விஞ்சிமூர் வேங்காடச்சாரி ஸ்வாமி, ஸ்ரீவில்லிபுத்தூர்

### பெரியாழ்வார்

### தனியன்

மிதுநே ஸ்வாதிஜம் விஷ்ணோ ரதாம்ஸம் தந்விந: புரே /
ப்ரபத்யே ஸ்வஸுரம்விஷ்ணோர் விஷ்ணுசித்தம் புரஸ்ஸிகம் //

திருநாமங்கள் - ஸ்ரீவிஷ்ணுசித்தர், பட்டர்பிரான், பட்டநாதர், பெரியாழ்வார்
அருளிச்செய்த ப்ரபந்தங்கள் - திருப்பல்லாண்டு – 12 பாசுரங்கள்
பெரியாழ்வார் திருமொழி – 461 பாசுரங்கள்

## நாள் பாட்டு - உபதேசரத்தினமாலை - 16ஆம் பாசுரம் முதல் 20ஆம் பாசுரம் முடிய

இன்றைப் பெருமை அறிந்திலையோ ஏழை நெஞ்சே
இன்றைக்கென்னேற்றமெனி லுரைக்கேன். - நன்றிபுனை
பல்லாண்டுபாடிய நம் பட்டர்பிரான் வந்துதித்த
நல்லானியிற் சோதி நாள்.

மாநிலத்தில் முன் நம்பெரியாழ்வார் வந்துதித்த
ஆனிதன்னில் சோதி என்றால் ஆதரிக்கும் - ஞானியர்க்
கொப்போரில்லை யிவ்வுலகுதனில் என்று நெஞ்சே
எப்போதும் சிந்தித்திரு.

மங்களாசாசநத்தில் மற்றுள்ள ஆழ்வார்கள்.
தங்கள் ஆர்வத்தளவுதான் அன்றி. - பொங்கும்
பரிவாலே வில்லிபுத்தூர்ப் பட்டர்பிரன் பெற்றான்
பெரியாழ்வார் என்னும் பெயர்.

கோதிலவாம் ஆழ்வார்கள் கூறு கலைக்கெல்லாம்
ஆதி திருப்பல்லாண்டு ஆனதுவும் - வேதத்துக்கு
ஓம் என்னும் அது போல் உள்ளதுக்கெல்லாம் சுருக்காய்.
தான் மங்கலம் ஆதலால்.

உண்டோ திருபல்லாண்டுக் கொப்பதோர் கலைதான் ?
உண்டோ பெரியாழ்வார்க் கொப்பொருவர். தண் தமிழ் நூல்
செய்தருளும் ஆழ்வார்கள் தம்மில் அவர் செய்கலையில்
பைதைல் நெஞ்சே நீயுணர்ந்து பார்.

### வாழித்திருநாமம்

நல்ல திருபல்லாண்டு நான்மூன்றோன் வாழியே
நானூற்றறு பத்தொன்றும் நமக்குரைத்தான் வாழியே
சொல்லரிய வானிதனில் சோதிவந்தான் வாழியே
தொடை சூடிக்கொடுத்தவள் தன்தொழுந்தமப்பன் வாழியே
செல்வநம்பி தன்னைப்போல் சிறப்புற்றான் வாழியே
சென்று கிழியறுத்து மால் தெய்வமென்றான் வாழியே
வில்லிபுத்தூர் நகரத்தை விளக்கினான் வாழியே
வேதியர்கோன் பட்டர்பிரான் மேதினியில் வாழியே.

## இவரை போற்றி உறைக்கும் பாசுரம் - இராமாநுஜநூற்றந்தாதி - 15ஆம் பாசுரம்

சோராத காதல் பெருஞ்சுழிப்பால். தொல்லைமாலை யொன்றும்
பாராதவனைப் பல்லாண்டென்று காப்பிடும் - பான்மையன்தாள்
பேராதவுள்ளத் திராமானுசன்றன் பிறங்கியசீர்
சாரா மனிசரைச் சேரேன். எனக்கென்ன தாழ்வினியே.

## பெரியாழ்வார் விஷயமாக ஸ்ரீமந் நாதமுனிகள் அருளியுள்ள தனியன்

குருமுகமநதீத்ய ப்ராஹ வேதாநசேஷாந்
நரபதி பரிக்லுப்தம் சுல்கமாதாதுகாம: /
ச்வசுரமமரவந்த்யம் ரங்கநாதஸ்ய ஸாசஷாத்
த்விஜகுல திலகம் தம் விஷ்ணுசித்தம் நமாமி //

## பெரியாழ்வார் விஷயமாக பாண்டிய பட்டர் அருளியுள்ள தனியன்கள்

மின்னார்தடமதிள்சூழ் வில்லிபுத்தூரென்றொருகால்
சொன்னார் கழற்கமலஞ் சூடினோம் - முன்னாள்
கிழியறுத்தா னென்றுரைத்தோம். கீழ்மையினிற் சேரும்
வழியறுத்தோம் நெஞ்சமேவந்து.

பாண்டியன் கொண்டாடப் பட்டர்பிரான் வந்தானென்று
ஈண்டிய சங்கமெடுத்தூத - வேண்டிய
வேதங்களோதி விரைந்து கிழியறுத்தான்
பாதங்கள் யாமுடையபற்று.

## ஸ்ரீவிஷ்ணுசித்தருக்கு பட்டர்பிரான் மற்றும் பெரியாழ்வார் என்கிற திருநாமங்கள் ஏற்படுதல்

ஸ்ரீவிஷ்ணுசித்தர் பாண்டிய ராஜா வல்லபதேவனுடைய சபையில் பொற்கிழியையறுத்து `ஸ்ரீமன் நாராயணனே பரம்பொருள்' என்று நிலைநாட்டிய பிறகு ராஜா இவரை சகல மரியாதைகளுடன் யானையின் மீது எற்றி நகர்வலம் வரச்செய்தான். அக்காலத்தில் ஆழ்வார் பாண்டியர்கள் அனைவர்க்கும் தலைவராய் விளங்கினமையால் ராஜா இவருக்கு `பட்டர்பிரான்' என்று திருநாமம் சாத்தினான். இப்படி ஆழ்வார் நகர்வலம் வருவதைக்கண்டு ஆநந்திக்க விரும்பிய பரமபதநாதன், கருடாருபனாய் ஸங்க சக்ரதரனாய் ஸ்ரீபூமிப்ராட்டி ஸமேதனாக, பிரமன் சிவன் முதலிய இதர தேவதைகளும் துதித்து நிற்க, பூமியிலுள்ள அனைவரும் காணும்படி ஆகாயத்தில் தோன்றினான். எம்பெருமானுடைய நிர்ஹேதுக கிருபையாலே மயர்வற மதிநலம் அருளப்பெற்ற ஆழ்வாரும் `காலாதீதமான ஸ்ரீவைகுண்டத்திலே எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமந் நாராயணன் இவ்விருள்தருமா ஞாலத்தில் கல்யாணகுணங்களுடன் கூடய ரூபத்துடன் கொள்ளிக் கண்ணர்களும் காணும்படி வந்திருப்பதால் அவற்கு என்ன தீங்கு வருமோ? கண் திஷ்டி ஏதேனும் பட்டு விடுமோ? என்று பயந்து, `பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு பலகோடி நூறாயிரம்' என்று தொடங்கி பட்டத்துயானையின் மேலிட்டிருந்த இருமணிகளையே தாளாமாக் கொண்டு திருப்பல்லாண்டு பாடத் தொடங்கினார். இப்படி தாம் மட்டும் ஒருவராகப் பல்லாண்டு பாடியதில் திருப்தி கொள்ளாமல், தம்மைபோன்ற அநந்யப்ரயோஜனர்களையும் சேர்த்துக்கொண்டும், ஐஸ்வர்ய கைவல்யார்த்திகளைத் திருத்திச் சேர்த்துக்கொண்டும், மேல் பாசுரங்களையும் பாடி திருப்பல்லாண்டு என்னும் திவ்யப்ரபந்தத்தைத் தலைக்கட்டினார். இவருடைய பொங்கும் பரிவைக்கண்ட எம்பெருமானும் இவருக்கு `பெரியாழ்வார்' என்னும் பட்டம் சூட்டி மறைந்தருளினான்.

## பெரியாழ்வார் திருமொழி அவதரித்தல்

அதற்குப்பின் திருப்பல்லாண்டின் ஸாராாத்தத்தை வல்லபதேவனுக்கு உபதேசித்து ஸ்ரீவில்லிபுத்தூருக்கு எழுந்தருளினார். பொற்கிழியுலுள்ள பெரும் தனத்தைக்கொண்டு வடபெருங்கோயிலுடையானுக்கு கோபுரம் அமைத்து அரியபெரிய திருப்பணிகள் செய்தார். ஆழ்வார் கிருஷ்ணவதாரத்தில் மிகவும் ஈடுபட்டு கிருஷ்ணனின் பால்யலீலைகள் ஒன்றும் விடமால் விஸ்தாரமாக அநுபவிக்கும் `பெரியாழ்வார் திருமொழி' என்கிற திவ்யப்ரபந்தத்தை அநுக்ரஹித்தார். இவர் கிருஷ்ணகுணசேஷ்டிதங்களை யசோதா பாவனையிலேயே ஒன்று விடாமல் அநுபவிக்கையாலே `போகத்தில் வழுவாத புதுவையர்கோன்' என்று பெற்றெடுத்த பெண்பிள்ளையான ஆண்டாளாலும் புகழப்பெற்றார்.

## திருவரங்கச் செல்வனாருக்கு மாமனாராதல்



உள்ளாண்டாளும் திருவரங்கச்செல்வனும்
(கற்பனையான புகைப்படம் - உண்மை நிகழ்வுயில்லை)

திருவரங்கச் செல்வன் பெரியாழ்வாரின் கனவிலே எழுந்தருளி, `உம்முடைய பெண்ணான கோதையைக் கூட்டிக்கொண்டு நம்கோயிலுக்கு வாரீர். அவளுக்குத் தகுதியாக நாமே அவளைக் கைப்பிடிக்கிறோம்' என்று அருளிச்செய்தார். இதைக்கேட்ட ஆழ்வாரும் மிகவும் உகந்து கவலையற்றிருந்தார். நம்பெருமாளால் நியமிக்கப் பெற்ற திருவரங்கத்து கைங்கர்யபரர்கள் அவருடைய குடை, சாமரம், திருவாலவட்டம் முதலிய எல்லா பரிச்சதங்களோடும் ஸ்ரீவில்லிபூத்தூருக்குச் சென்று, நம்பெருமாள் நியமனத்தை விண்ணப்பம் செய்ய, ஆழ்வாரும் மிக உகந்து ஆச்சர்யப்பட்டு, வடபெருங்கோயிலுடையானுடைய அநுமதிகொண்டு, மணிகளிழைத்த மூடு பல்லக்கிலே ஆண்டாளை எழுந்தருள்வித்துக்கொண்டு, வாத்யகோஷங்களுடன்,

தொண்டர்குழாம்புடைசுழ, `ஆண்டாள் வந்தாள், சூடிக்கொடுத்தாள் வந்தாள், சுரும்பார்குழற்கோதை வந்தாள், திருப்பாவை பாடிய செல்வி வந்தாள், தென்னரங்கம் தொழும் தேசுடையாள் வந்தாள்' என்று பல திருச்சின்னங்கள் பணிமாற வந்து அழகிய மணவாளனுடைய பெரிய திருமண்டபத்தே சென்று சேர்ந்தார்கள். மூடுபல்லக்கை மூடியிருந்த தட்டுப்பாயை அகற்ற, சூடிக்கொடுத்த நாச்சியாரும் அனைவரும் காணும்படி - சிலம்பார்க்கச் சீரார்வளையொலப்ப, அன்னமென்ன நடையும் கொண்டு அழிகிய மணவாளன் திருமுன்பே சென்று உள்ளே புகுந்து, கண்களாரக்கண்டு, கேசவநம்பியைக் கால்பிடிப்பாள் என்னும் பேறுபெற்று, நாகத்தணையை மிதித்தேறி, தீ முகத்து நாகணைமேல் சேரும் திருவரங்கரைச் சேர்ந்து, எப்போதும் திருவரங்கன் திருவடி வருடாலம்படி மறைந்தருள, இதைக்கண்ட ஆழ்வாரும், அவர் சிஷ்யரான வல்லபதேவன் முதலானாரும் ஆச்சர்யபட, திருவரங்கச்செல்வனார் ஆழ்வாருக்கு அருளப்பாடிட்டருளி `திருப்பாற் கடலரசனைப்போலேயும், ஜனகசக்ரவர்த்தியைப்போலேயும், நீரும் நமக்கு மாமனார் ஆகிவிட்டீர்' என்று மிகவும் உகந்தருளி, அவர்க்கு தீர்த்தம், திருமாலை திருப்பரியட்டத்துடன், ஸ்ரீசடகோபனும் பிரஸாதித்து, வில்லிபுத்தூருறைவானுக்கே கைங்கர்யம் செய்து கொண்டு வாழந்து வருவீர்' என்று திருவாய் மலர்ந்து பெரியாழ்வாருக்கு விடை கொடுத்தருளினார். ஆழ்வாரும் `ஒருமகள் தன்னையுடையேன் உலகம் நிறைந்த புகழால் திருமகள் போல வளர்த்தேன் செங்கண்மால் தான் கொண்டுபோனான்' என்று தாம்பாடியது உண்மையானதை நினைந்து ஆச்சர்யப்பட்டு, ஸ்ரீவில்லிபுத்தூருக்குச் சென்று முன்போலவே எம்பெருமானுக்கு புஷ்பகைங்கர்யங்கள் செய்து வந்தார்.



ஸ்ரீஆண்டாளும் ஸ்ரீரங்கமன்னாரும், ஸ்ரீவில்லிபுத்தூர்
புகைப்படம் உதவி: ஸ்ரீ உ.வே விஞ்சிமூர் வேங்காடச்சாரி ஸ்வாமி, ஸ்ரீவில்லிபுத்தூர்

## வடக்குத்திருவீதிப்பிள்ளை

### தனியன்

மிதுநே ஸ்வாதிஸம்பூதம் கலிவைரிபதாஶ்ரீதம் /
உதக்ப்ரதோளீ நிலயம் க்ருஷ்ண பாதமஹம் பஜே //

அவதாரஸ்தலம் - ஶ்ரீரங்கம்
திருநாமம் - ஶ்ரீகிருஷ்ணர்
திருக்குமாரர்கள் - ஶ்ரீ பிள்ளைலோகாசார்யர்,அழகிய மணவாளப்பெருமாள் நாயனார்
ஆசாரியர் - நம்பிள்ளை

இவர் 74 சிம்மாசனாதிபதிகளில் ஒருவரான முடும்பை நம்பியின் வம்சத்தில் அவதரித்தவர். பிரதிவாதி பயங்கரம் அண்ணா, எறும்பியப்பா, ஆத்தான் ஸ்வாமி முதலானவர்கள் இவர் வம்சத்தில் அவதரித்தவர்களே. இவரும் பெரியவச்சான் பிள்ளையும், நம்பிள்ளையை ஆச்ரயித்து நாலாயிர திவ்ய ப்ரபந்த வ்யாக்னங்களைக் கேட்டுத்தெளிந்தார்கள். பெரியவாச்சான் பிள்ளை நம்பிள்ளையின் நியமனப்படி திருவாய்மொழிக்கு இருபத்துநாலயிரப்படி வ்யாக்கியானம் எழுதினார். இவர் நம்பிள்ளையின் திருவாய்மொழி கலசேஷபம் கேட்டு அவர் சொல்லியவற்றை எல்லாம் ஏடு படுத்தி முப்பத்தாறயிரப்படி வ்யாக்கியானம் எழுதினார்.

### இவரை போற்றி உரைக்கும் பாசுரம் - உபதேசரத்தினமாலை – 44, 48, 52ஆம் பாசுரங்கள்

தெள்ளியதா நம்பிள்ளை செப்பு நெறி தன்னை.
வள்ளல் வடக்குத் திருவீதிப் - பிள்ளை. இந்த
நாடறிய மாறன் மறைப்பொருளை நன்குரைத்தது.
ஈடு முப்பத்தாறாயிரம்.

சீரார் வடக்குத் திருவீதிப்பிள்ளை. எழு
தேரார் தமிழ் வேதத்தீடுதனைத் - தாருமென
வாங்கி முன் நம்பிள்ளை யீயுண்ணி மாதவர்க்குத்
தாம் கொடுத்தார். பின்ன தனைத்தான்.

பின்னை வடக்குத்திருவிதீப்பிள்ளை. அன்பால்
அன்ன திருநாமத்தை யாதரித்து. - மன்னுபுகழ்
மைந்தர்க்குச் சாற்றுகையால் வந்து பரந்தது. எங்கும்
இந்தத் திருநாம மிங்கு.

**சிஷ்யர்கள் - பிள்ளைலோகாசார்யர், அழகிய மணவாளப்பெருமாள் நாயனார், கூரகுலோத்தம தாஸர்**

## ஈடு முப்பத்தாறாயிரப்படி வியாக்கியானம் அவதரித்த வரலாறு

காஞ்சீ ஸ்ரீ உவே **PBA** ஸ்வாமி உபதேசரத்தினமாலை 48, 49ஆம் பாசுரங்களுக்கு அருளியுள்ள அர்த்த விசேஷங்களிலிருந்து தொகுக்கப்பட்டது.

திருவாய்மொழிக்கு கீழ்க்கண்ட ஐந்து வியாக்கியானங்கள் அவதரித்தன. ஆறுயிரப்படி, ஒன்பதினாயிரப்படி, பன்னீராயிரப்படி, இருபத்து நாலாயாயிரப்படி, ஈடு முப்பத்தாறாயிரப்படி. இந்த ஐந்து வியாக்கியானங்களுள் வடக்குத்திருவீதி பிள்ளை அருளியுள்ள ஈடு முப்பத்தாறாயிரப்படி என்கிற வியாக்கியனமே காலசேஷபப்ரசாரத்தில் முக்கியமாக இருந்து வருகிறது. இதைப்பற்றின வரலாற்றை உணர்த்த வேணுமென்று திருவுள்ளம் பற்றிய மாமுனிகள், உபதேசரத்தினமாலை 43ஆம் பாசுரத்திலும், 44ஆம் பாசுரத்திலும் யுணர்த்தி உள்ளார். `நம்பிள்ளை தம்முடைய நல்லருளாலேயவியிட பின் பெரியவாச்சான்பிள்ளை யதனால்' என்று அருளிச்செய்தபடி நம்பிள்ளையின் நியமனத்தினால் பெரியவாச்சான் பிள்ளையிட்டருளின இருபத்து நாலாயாயிரப்படி வியாக்கியானம் இருக்கவும், நம்பிள்ளை மற்றொரு சமயம் திருவாய்மொழிப்பொருளை உபந்யஸித்தருளும்போது அதைக்கேட்டு அறிந்து வடக்குத்திருவீதிபிள்ளை பட்டோலை கொண்டு ஈடுமுப்பத்தாறாயிரப்படியாக்கி முடித்து நம்பிள்ளை ஸன்னதியிலே கொண்டுபோய் வைத்தருளினார். அதை அவர் கடாஷித்து `ஆனை கோலம் செய்தாப்போலே அழகிய தாகவே காண்கிறது. ஆகிலும் நமது கட்டளையின்றிக்கே எழுதினீர். இருக்கட்டும்' என்று சொல்லி அந்த ஸ்ரீகோசத்தை உள்ளே வைத்தருளினார். பெரிய பெருமாளுடைய நியமனம் ஆனாலன்றி நம்பிள்ளை இந்த ஸ்ரீகோசத்தைத் தந்தருளாரென்று தெரிந்துகொண்ட ஈயுண்ணி மாதவப்பெருமாள் என்பவர், இந்த ஈடுவியாக்கியானமே உலகில் பிரசாரம் பெறவேணுமென்ற ஆவல் கொண்டு அதற்குப் பாங்காக பகவந் நியமனத்தைப் பெறவேண்டும் என்று கருதிப் பலகாலம் பெரியபெருமாளை வலஞ்செய்து வந்தார். பெரியபெருமாளும் திருமுள்ளமுகந்து இரங்கி நம்பிள்ளைக்கு நியமித்தருளவே, பின்பு அந்த ஸ்ரீகோசத்தை ஈயுண்ணி மாதவப்பொருமாளுக்கு ஈந்தருளினார். இவரும் தம்முடைய திருக்குமாரரன பத்மநாபப்பெருமாளுடைய கையில் கொடுத்தார். அவர் நாலூர்பிள்ளையிடம் கொடுத்தார். அவர் தம் திருக்குமாரரன நாலூரச்சான்பிள்ளையிடம் கொடுத்தார். அவர் தன் சிஷ்யர்கள் திருவாய்மொழிப் பிள்ளை, திருநாராயணபுரத்து ஆய் (ஜநந்யாசார்யர்), இளம்பிளிசைப்பிள்ளை மூவருக்கும் கொடுத்தார். திருவாய்மொழிப்பிள்ளை மாமுனிக்குக் கொடுத்தார். பெரிய பெருமாளின் நியமனப்படி மாமுனிகள் ஸ்ரீரங்கத்தில் பெரியமண்டபத்திலே நம்பெருமாள் முன்பு ஈடுகாலசேஷபம் சாதித்து பிரகடனப்படுத்தினார். அதனால் `மாமுனிக்கு ஈட்டுப்பெருக்கர்' என்ற பெயர் ஏற்பட்டது.

## வடக்குத்திருவீதிப்பிள்ளையின் பெருமைகள்

`ஜகதாசார்யா' என்று போற்றபடும் நம்பிள்ளையின் சிஷ்யர்களில் தலைசிறந்து விளங்குபவர்கள் பெரியவாச்சான்பிள்ளையும், வடக்குத்திருவீதிபிள்ளையும் ஆவார்கள். `ஸ்ரீக்ருஷ்ணத்வயௌ' என்று கொண்டாப்படுமிவர்களில் வடக்குத்திருவீதிபிள்ளையை மாமுனிகள் `வள்ளல் வடக்குத்திருவீதிபிள்ளை' (உபதேசரத்தினமாலை - 44ஆம் பாசுரம்) என்று சிறப்பிக்க பாடுகிறார். தெள்ளியதா நம்பிள்ளை செப்பு நெறியான திருவாய்மொழியின் மஹார்த்தங்களைக் கேட்டு ஏடுபடுத்தி `ஈடு முப்பத்தாறாயிரப்படி' என்கிற ஒப்பற்ற க்ரந்தத்தை நாடறிய ஈந்தது முதல் வள்ளன்மை. இரண்டாவதாக ஒப்பில்லாத புத்ர ரத்னங்கள் இருவரைப்பெற்று ஸ்ரீவைஷ்ணவ உலகுக்கு ஈந்தது மற்றதொரு வள்ளன்மை. இவ்விருகுமாரார்களில் மூத்தவர் பிள்ளைலோகாசாரியர் முமுக்ஷுப்படி, தத்வத்ரயம் ஸ்ரீவசநபூஷணம் முதவான 18 ரஹஸ்ய க்ரந்தங்கள் `அஷ்டாதஸரஹஸ்யம்' என்று தொகுப்பாக அருளிச்செய்த மஹோபகாரகர். இளையவர் அழகிய மணவாளப்பெருமாள் நாயனார். இவர் அருளிச்செய்தவை ஆசார்ய ஹ்ருதயம், அருளிச்செயல் ரஹஸ்யம் என்ற இரண்டு நூல்களும், திருப்பாவைக்கு ஆராயிரப்படி வியாக்கியானமும், கண்ணிநுண்சிறுத்தாம்பு வியாக்கியானமும், அமலநாதிபிரான் வியாக்கியானமும் ஆகும்.

## வாழித்திருநாமம்

ஆனிதனில் சோதி நா ளவதரித்தான் வாழியே
ஆழ்வார்கள் கலைப் பொருளை ஆய்ந்துரைப்போன் வாழியே
தான் உகந்த நம்பிள்ளை தாள் தொழுவோன் வாழியே
சடகோபன் தமிழ்க்கு ஈடு சாற்றினான் வாழியே
நானிலத்தில் பாடியத்தை நடத்தினான் வாழியே
நல்ல உலகாரியனை நமக்கு அளித்தான் வாழியே
ஈனமற வெமையாளும் மிறைவனார் வாழியே
எங்கள் வடவீதிப் பிள்ளை யிணையடிகள் வாழியே.

## ஆனி மாதா ஸ்வாதி திருநட்சத்திரத்தின் ஏற்றம் - நல்லானியிற் சோதி நாள்

பொங்கும் பரிவுடைய பட்டர்பிரான் திருஅவதரித்ததும், திருவாய்மொழிக்கு வியாக்கியானம் அருளிய வடக்குத்திருவீதிப்பிள்ளை திருஅவதரித்ததுவம் இந்நன்னாளிலே.

பெரியாழ்வார், வடக்குத்திருவீதிப்பிள்ளை, வாதிகேஸரி அழகியமணவாள ஜீயர் திருவடிகளே சரணம்.

வாசிக தோஷ: க்ஷந்தவ்ய: